# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | S.T.C. 1003/2025 | Date | : | 06.04.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.2** | Taluk | : | |
| Name | : | **திரு.மயில்கணேசன்** | Calling | : | **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** |
| Father / Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.04.2026.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மகுடஞ்சாவடி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.மணி அவர்கள் வேறு பணியில் இருப்பதால் அவரது கையொப்பம் எனக்கு பரீட்சையம் என்பதாலும், வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13.05.2025–ஆம் தேதி, 18.30 மணிக்கு மகுடஞ்சாவடி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளரும், முதல்நிலை காவலர் திரு.கார்த்திகேயன், தலைமை காவலர் திரு. ஜெய்சங்கர் என்பவரும் மது விலக்கு மற்றும் குற்றதடுப்பு அலுவல் சம்மந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம், இடங்கணசாலை, நல்லணம்பட்டி காட்டுவளவு வழியாக

கண்காணித்துக் கொண்டு சென்றபோது அங்குள்ள பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறாக மது அருந்தி கொண்டிருந்த பின்னால் பெயர் விலாசம்கேட்டு தெரிந்த முத்து த/பெ. பழனிசாமி நல்லணம்பட்டி காட்டுவளவு, இடங்கணசாலை, சங்கரிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் எங்களை கண்டதும், ஓட எத்தணித்தவரை போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து அந்த இடத்தில் பார்த்தபோது சுமார் 180ML அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டிலில் சுமார் 90ML அளவுடன் கூடிய பிராந்தி மற்றும் பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று பிராந்தியுடன் இருந்தது. விசாரித்தபோது மேற்படி எதிரியானவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணத்தை தெரிவித்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் 18.45 மணிக்கு கைது செய்தும், மேற்படி தடயங்களை கைப்பற்ற அந்நேரத்தில் அவ்விடத்தில் இருந்த பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் அலுவலுக்கு வந்திருந்த முதல்நிலை காவலர் திரு.கார்த்திகேயன், தலைமை காவலர் திரு. ஜெய்சங்கர் என்பவரையும் சாட்சிகளாக வைத்து 19.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி தடயத்தை உத்தரவுபடி அதே இடத்தில் யாருக்கும் பயன்படாத வண்ணம் கீழே கொட்டி அழித்த மகஜர் தயார் செய்தும் முதல்நிலை காவலர் திரு.கார்த்திகேயன், தலைமை காவலர் திரு. ஜெய்சங்கர் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் முதல்நிலை காவலர் திரு.கார்த்திகேயன், தலைமை காவலர் திரு. ஜெய்சங்கர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். பின்னர் 19.30 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 172/2025 u/s 4-A TNP Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும்**

**அழித்தல் மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வாக்குமூலங்கள் பதிவு செய்து மேற்படி ஆவணங்களை மாண்புமிகு நீதிமன்றத்திற்கு அனுப்பியும், வழக்கின் புலன் விசாரணையை முடித்து 13.05.2025 தேதியில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் முன்னிலையில் எந்த வழக்கு குற்ற சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய் புகார் பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness -

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

**Sd/- D.Sivakumar**

Judicial Magistrate No.II,
Sankari.